**தலைப்பு 06 – அரசாங்க சேவை ஆணைக்குழு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 06 - அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 யூன் 02 ஆந் திகதி ஆணைக்குழுவின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 1406, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2 கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

நியாயசபைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 344.15 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 283.48 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ஆணைக்குழுவிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 60.67 மில்லியன் அதாவது 17.63 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 159.00 | 157.01 | 1.99 | 1.25 |
| மூலதனம் | 185.15 | 126.47 | 58.68 | 31.69 |
| மொத்தம் | **344.15** | **283.48** | **60.67** | **17.63** |

**2.2 முற்பணக் கணக்கு**

**2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

நியாயசபைக்குரிய 00601 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | அதிகூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 7.50 | 6.00 | 3.00 | 5.13 | 33.00 | 20.24 |

**2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

ஆணைக்குழுவின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள்

மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2017 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் ஆணைக்குழுவினால் 2017 மே 30 ஆந் திகதி வரை அவ்வறிக்கை கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2015 ஆம் ஆண்டிற்காக நடாத்தப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்த உடைந்த பொருட்களின் இருப்பு 2017 நவம்பர் 27 ஆந் திகதி மற்றும் 2016 மே 26 ஆந் திகதிகளில் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த ஏலவிற்பனை தொடர்பாக தகவல்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. அதன் காரணமாக புத்தகங்களிலிருந்து அகற்றப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 3.2 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை செயற்படுத்துதல்

### செயற்திட்டங்களை நிறைவேற்றுதில் தாமதங்கள்

ஒப்பந்தத்தை நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் வெற்றிகரமாக பூர்த்தி செய்யும் இயலுமை உரிய கம்பனியிடம் காணப்படுவதாக ஆணைக்குழு திருப்தியடைய வேண்டும் என்ற நிபந்தனையொன்றுடன் ஆணைக்குழுவிற்காக நிரந்தர கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் செயற்பாடு ரூபா 417.83 மில்லியன் ஒப்பந்தப் பெறுமதிக்கு மத்திய பொறியியலாளர் சேவைகள் தனியார் கம்பனிக்கு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 900 நாட்களுக்குள் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன், 2015 சனவரி 02 ஆந் திகதி வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்ததால் 2017 யூன் 22 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது, எனினும் ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வேலைத் திட்டத்தின் பிரகாரம் வேலைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு ஆணைக்குழு தவறியிருந்தமை காரணமாக 2017 யூன் 19 ஆந் திகதி வரையிலும் நிதிச் செயலாற்றல் ரூபா 278.42 மில்லியனாக இருந்தது, மேலும் பௌதீக செயலாற்றல் மதிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 47 | 36 | 11 |
| (ii) | மூன்றாம் நிலை | 09 | 05 | 04 |
| (iii) | இரண்டாம் நிலை | 112 | 86 | 26 |
| (iv) | ஆரம்ப நிலை | 52 | 44 | 08 |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 03 | 03 | - |
| | மொத்தம் | 223 | 174 | 49 |

ஆணைக்குவிற்கு கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றும் போது நிருவாகத்திற்கான மேன்முறையீட்டு நியாயசபைக்கு சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் மற்றும் உயர்நீதிமன்றம் மேன்முறையீட்டு நீதிமன்றம் என்பவற்றிற்கு சமர்ப்பிக்கப்படும் வழக்குகள் தொடர்பான சட்ட நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டிய போதிலும், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியர் எண்ணிக்கையில் உள்ள ஒரு சட்ட உத்தியோகத்தர் பதவி உட்பட 11 பதவிநிலைத் தர பதவிகளையும் 38 வேறு பதவிகளையும் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.